அ.வ.எண்.176/2017 நாள்: 12.02.2026

பி.சா. 1 திரு.மணிவண்ணன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5. தஞ்சாவூர் மாவட்ட பொதுபணித்துறையில் வெண்ணாறு வடிநிலகோட்டம் காவேரி வடிநிலகோட்டம் தவிர வேறு உள்ளதா என்றால் கல்லனை கால்வாய் கோட்டம் உள்ளது. காவேரி வடிநில கோட்டத்திற்கும் வெண்ணாறு வடிநில கோட்டத்திற்கும் ஒரே கண்காணிப்பு பொறியாளர் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் RTI மூலம் பெறப்பட்ட 29.04.2024 தேதியிட்ட கடிதம் ஆனது. செயல்பொறியாளர் வெண்ணாறு வடிநிலகோட்டம் அவர்களால் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். தஞ்சாவூர் காவேரி உபகோட்ட பொறியாளர் கோட்ட பொறியாளர் அவர்களுக்கு சிபாரிசு செய்த கடித எண். கோ. எண்.23/92 நாள் 08.02.93 நாளிட்ட கடிதம் எங்களது அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் இல்லை.தஞ்சாவூர் கோட்ட பொறியாளர் தஞ்சை கண்காணிப்பு பொறியாளர் அவர்களுக்கு சிபாரிசு செய்த கடித எண். 13721 /92 /த 2 நாள் 19.05.1993 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். கண்காணிப்பு பொறியாளர் தலைமை பொறியாளர் பாசனம் சென்னை அவர்களுக்கு சிபாரிசு செய்த கடித எண். 14127/92/எ 2 நாள் 18.10.1993 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும்.

6. தலைமை பொறியாளர் பாசனம் அவர்கள் அரசு செயலாளருக்கு அனுப்பிய கடித எண். சி 2/76148 எ/92 பி நாள் 06.02.93 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். அரசு செயலாளர் தலைமை செயலாளர் பொதுபணித்துறைக்கு அனுப்பிய கடித எண். 91865/எப் 2/1993 நாள் 14.12.1993 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். அரசு செயலாளர் தலைமை பொறியாளர் பாசனம் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் தேதி 25.04.94 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். அரசு இணை செயலாளர் பொதுப்பணித்துறை பாசனம் அவர்கள் நில நிர்வாக

ஆணையருக்கு அனுப்பிய கடிதம் நாள் 14.06.94 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். அரசு செயலாளர் அவர்கள் தமிழக அரசு தனிநில நிர்வாக ஆணையருக்கு அனுப்பிய கடித எண்.81405/Q/94w/21.10.1997 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும். நில நிர்வாக ஆணையர் சென்னை தஞ்சை மாவட்ட வருவாய் அதிகாரிக்கு அனுப்பிய கடித எண்.ஜி2/47677/65950/95 நாள் 02.01.1996 தேதியிட்ட கடிதம் தற்போது கையில் இல்லை அலுவலக கோப்பில் பார்த்தால் தான் தெரியும்.

7.மேலே கூறப்பட்ட அனைத்து கடிதங்களும் வழக்கு சம்மந்தப்பட்ட வாதிகளுக்கு ஒப்படைக்கலாம் என சிபாரிசு செய்யப்பட்ட கடிதங்கள் அவைகள் அனைத்தும் வாதிகளுக்கு சாதகமாக இருப்பதால் நீங்கள் தவறான உள் நோக்கத்தின் அடிப்படையில் மேற்கண்ட கடிதங்களை இந்த நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அலுவலக கோப்பில் இருந்தால் வரும் விசாரணை தேதியில் நான் எடுத்துவந்து சமப்பிக்கிறேன்.

8.என்னிடம் காண்பிக்கப்படும் இ.செலான் payment Account code No. 070101101AB237WRD CAUVERY DN THANJAUR தலைப்பிற்குரியது என்றால் சரிதான். துரைசாமி நாட்டார் இறந்து 61 ஆண்டுகள் ஆன பிறகும் தாவா சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கு எங்கள் துறையில் பராமரிக்கப்படும் கோப்புகள் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் ஆமாம், காசிநாதன், வேணுகோபால் , கலியராஜ் மற்றும் ஒருவர் அனுபவத்தில் உள்ளது என்று தெரியவருகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தில் ராமதாஸ் என்பவர் தாக்கல் செய்த ரிட் மனு எண்.5186/2006 அந்த வழக்கில் எங்கள் துறையின் மூலம் தாக்கல் செய்த பிராமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் ஏற்கனவே எங்கள் அலுவலக நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டது என்று தவறான செய்திகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அலுவலக கோப்பை பார்த்தால் தான் தெரியும்.

9. தாவா சொத்திலிருந்து வாதியை எந்த உத்தரவின் அடிப்படையில் வெளியேற்றினோம் என்றால் மேற்படி இடமானது எங்களது துறைக்கு தேவைப்படுவதால் வெளியேற்றினோம். அந்த உத்தரவை அடுத்த விசாரணையின் போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த உத்தரவும் வாதிக்கு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, சார்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் எங்களது அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் அடுத்த விசாரணையின் போது தாக்கல் செய்கிறேன்.

S.d/ Manivannan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.12 15:59:03 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU